நாள்: 27.03.2026

OS. 191/2019
பெயர் அருள்செல்வன்
பி.வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u> (வாதி தரப்பு )

வாதிகள் எதற்கு வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் மண்டகப்படி முதல் மரியாதை சம்பந்தமாக தாக்கல் செய்திருப்பார்கள். 4 வது நாள் மண்டகப்படி நடைபெறவில்லை என்பதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் சட்டம் பயின்றுள்ளேன். அறநிலைத்துறையில் 16 வருடங்களாக பணியாற்றி வருகிறேன். இந்து அறநிலையத்துறை ஆணையர் பிறப்பிக்கும் உத்தரவு எங்களை கட்டுப்படுத்தும். அவர் 4ம் நாள் மண்டக்கபடி சம்பந்தமாக உத்தரவு பிறப்பித்திருந்தால் எங்களை கட்டுப்படுத்தும், ஆனால் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை. உத்தரவு இருந்தால் பராமரிப்போம். வா.சா.ஆ 2 உத்தரவு எங்களை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. இந்து அறநிலையத்துறை அதில் தரப்பினர் அல்ல. அந்த உத்தரவு பிறப்பிக்க நிர்வாக அலுவலர், அறநிலையத்துறை ஆய்வாளர் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு ஞாபகம் இல்லை.

திருக்கோவிலில் சிவகாமி அம்மன் பிரதான பெண் தெய்வம் என்றால் சரியல்ல. சிவகாமி அம்மன் உடனுறை தெய்வம் ஆகும். சின்னமனூரில் சிவகாமி அம்மன் யெரில் வேறு கோவில் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கோவிலில் சித்திரைத்திருவிழா தான் பிரதான திருவிழா என்றால் சரிதான். ஒவ்வொரு மண்டகப்படிக்கும் பந்தல், அலங்கார விளக்குகள், வானவேடிக்கை ஏற்பாடு செய்வது என்றால் சரிதான். அதற்கும் கோவிலுக்கும் சம்பந்தம் கிடையாது. மண்டக்கப்படிகாரர்கள் தனியாக ஏற்பாடு செய்வார்கள். மண்டகப்படி இடத்தில் அர்ச்சகர்கள் தீப அராதனை முடிந்தவுடன் நாங்கள் கோவிலுக்கு உற்சவரை எடுத்து வந்துவிடுவோம். மண்டக்கப்படிக்கு பாதகாணிக்கை ரசீது செலுத்தினால் தான் உற்சவர் மண்டகப்படிக்கு செல்வார். பாத காணிக்கை செலுத்தாவிட்டால் சாமியை அனுப்பமாட்டோம். மண்டகப்படி சார்பாக பாதகாணிக்கை யார் செலுத்தினாலும் பெற்றுக்கொள்வோம்.

மண்டக்கப்படி பொறுப்பாளர்கள் பாதகாணிக்கை பணம் கட்டினால் தான் கோவில் நிர்வாகத்தினர் பணத்தை பெற்றுக்கொள்வார்கள் என்றால் சரியல்ல. மண்டகக்படி தாரர்கள் யார் கட்டினாலும் வாங்கிகொள்வோம். மண்டக்கப்படி நிர்வாகஸ்தர்கள் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக இருக்கவேண்டும் என்றால் இல்லை. பழக்கவழக்கப்படி வாங்கிக்கொள்வோம். கூடுதல் பொறுப்பு என்றாலும் நான் தான் பொறுப்பு என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளுக்கு மட்டும் தான் நான் முதல் விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு 2018 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் இந்த வழக்கு பிரச்சனைக்கு நானும் பொறுப்பாவேன் என்றால் சரியல்ல. நான் பணி

உயர்வு பெற்று சென்றுவிட்டேன். அதனால் நிர்வாக அலுவலர் என்ற சட்டநபர் என்ற நிலையில் என் மீது தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல. 2019 ம் ஆண்டு ராமகிருஷ்ணன் தான் நிர்வாக அலுவலர் என்று சொல்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார்.

எனது கட்டுப்பாட்டில் உள்ள கோவிலில் எனது கீழ் நிலை ஊழியர்கள் தவறு செய்திருந்தால் அதற்கு நான் பொறுப்பாவேன். வா.சா.ஆ.3 , வா.சா–ஆ.4 கோவிலில் இருந்து வழங்கப்பட்ட ரசீதா என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை எதிர்வழக்குரையில் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.4 2018 ல் ரசீதில் உள்ளது எனது கையொப்பம் தான். நான் அந்த காலத்தில் பொறுப்பில் இருந்துள்ளேன். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆகிய தீர்ப்புகளின் அடிப்படையில் வாதிகளுக்கு இந்த வழக்கை நடத்துவதற்கு சட்டப்படியான உரிமை உள்ளது என்றால் அந்த வழக்கில் இந்து அறநிலையத்துறை வழக்கு தரப்பினர் இல்லாத நிலையில் அதை பற்றி எனக்கு தெரியாது.

2019 ம் ஆண்டு மண்டகப்படி நடத்துவதற்கு வாதிகள் உயர் நீதிமன்றத்தில் வா.சா.ஆ.11 மூலமாக உத்தரவு பெற்று வந்தார்கள் என்றால் உயர் நீதிமன்றத்தில் மன்னிப்பு கடிதம் எழுதிக்கொடுத்துவிட்டு உத்தரவு வாங்கி வந்தார்கள். மன்னிப்பு கடிததத்தை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. மன்னிப்பு கடிதம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், எழுதிக்கொடுத்திருந்தால் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. மேற்படி நீதிப்பேராணை தீர்ப்பில் பக்கம் 2 ல் இந்து சமய அறநிலையத்துறை நிலைஆணையர் நீதிமன்றம் முதல் மரியாதை சம்பந்தமான அளித்த தீர்ப்பினை உறுதி செய்து தான் தீர்ப்பு வழங்கியுள்ளது என்றால் அந்த தீர்ப்பு வழஙகிய தேதியில் நான் மதுரைக்கு பணிமாறுதல் பெற்று சென்றுவிட்டேன் அதனால் அதை பற்றி எனக்கு தெரியாது. தீர்ப்பில் முதல் மரியாதை பற்றி சொல்லியுள்ள நிலையில் அது எங்கள் நிர்வாகத்தை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.11 உத்தரவில் மண்டகப்படி மற்றும் ஜாதிகவுண்டர் பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா,ஆ.2 உத்தரவு வழங்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மண்டகக்கப்படி நடத்தக்கூடாது என அவர்களுக்கு எதிராக நீதிமன்ற உத்தரவு உள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1,2 உத்தரவை வைத்து தான் வா.சாஆ.3, வா.சா.ஆ.4 பாதகாணிக்கை ரசீது வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 வழக்கறிஞர் பதிலறிவிப்பு என் தகவலின் அடிப்படையில் அனுப்பப்பட்டது தான். வா.சா.ஆ.6 பதிலறிவிப்பில் 4 ம் நாள் மண்டகப்படியை ஒத்துக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. பாதகாணிக்கைக்கு பணம் செலுத்த மட்டும் தான் ஒத்துக்கொண்டேன். பதிலறிவிப்பில் வாதிகள் தான் மண்டகப்படிதாரர்கள் என்பதை ஒத்துககொண்டு பதிலறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. மண்டகக்கப்படி தேதியில் நான் உயர்நீதிமன்றம் சென்றேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்தேன் என்றால் 23.04.2018 ல் நான் உயர்நீதிமன்றம் ஆண்டிப்பட்டி தர்மசாஸ்தா

கோவில் செயல் அலுவலர் என்ற முறையில் ஆண்டிப்பட்டி சக்கம்பட்டி அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோவில் நடந்த திருவிழா சம்பந்தமாக சென்றிருந்தேன்.(சாட்சி குறுக்குவிசாரணையின்போது உயர்நீதிமன்ற Ecourt Business ஐ காண்பித்தார்) மேற்படி விவரத்தை என் பதிலறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். எனது பதிலறிவிப்பில் சிலபிரச்சனைகளால் மரியாதை செய்ய இயலவில்லை என கூறிவிட்டு தற்போது முரண்பாடாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் மரியாதைக்கும் கோவில் நிர்வாகத்திற்கும் சம்பந்தம் கிடையாது. ஆனால் மண்டகப்படிதாரர்கள் தான் அவர்களுக்குள் முதல் மரியாதை செய்து கொள்வார்கள்.

ஆண்டிப்பட்டியில் நான் சொல்வது போல் 23.04.2018 ல் எந்த ஒரு திருவிழாவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. திருவிழா நடைபெற்றது. அன்றைய தேதியில் சின்னமனூரில் நடந்த பிரச்சனை சம்பந்தமான வாதிகள் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. முதல் புகாரே நாங்கள் தான் கொடுத்தோம். நான் புகார் கொடுத்தது சம்பந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் நான் புகார் கொடுத்தேன் என்றால் கண்டிப்பாக பதிவு செய்திருப்போம் என்றால் பதிவு செய்துள்ளோம். தற்சமயம் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. வாதி மகேந்திரன் கொடுத்த புகாரில் காவல் துறையினர் விசாரித்தார்களா என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின் பெயரில் தான விசாரித்தார்கள். எங்கள் பணியாளர்கள் மீது தவறு இருந்தாக விசாரணையில் தெரியவந்தால் நான் காவல் நிலையத்தில் இருநத்து கோபித்து கொண்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

பாதகாணிக்கை செலுத்தும் மண்டகப்படிதாரர்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் முதல் மரியாதை செலுத்துவது வழககம் என்றால் சரியல்ல. திருக்கோவில் சார்பாக யாருக்கும் முதல் மரியாதை செய்வது கிடையாது. 23.04.2018 ல் இரவில் மண்டகப்படி தாரர்களுக்குள்ளே பிரச்சனை ஏற்பட்டது தவறு என்று சொன்னால் சரியல்ல. மண்டகப்படிதாரர்களுக்கிடையே பிரச்சனை என்றால் வாதி அவர்கள் மீது தான் புகார் கொடுத்திருப்பார் என்றும், 3, 4 பிரதிவாதிகள் மீது புகார் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. சண்டை போட்ட நபர்கள் பெயர் எனக்கு தெரியாது. அன்றைய தினம் வேறு நபர்கள் யாரும் வாதி சங்கத்தினர் மீது புகார் கொடுத்துள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மண்டகக்கப்படி அன்று திருக்கோவில் ஊழியர்களை நியமித்து எழுத்துப்பூர்வமாக உத்தரவு உடையதா என்றால் இல்லை. வாய்மொழி உத்தரவு தான்.

வாதிகள் கோவில் ஊழியர்களை தாக்கினார்கள் என சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல. நாங்கள் கோவில் நிர்வாகத்திலிருந்து புகார் கொடுத்தோம். அவர்களும் கொடுத்தார்கள். காவல்நிலையத்தில் புகார்களை சமரசமாக முடித்துக்கொண்டார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் பதிலறிவிப்புக்கு வாதிகள் அனுப்பிய reply நோட்டீஸ்க்கு மீண்டும் பதில் அனுப்பவில்லை என்றால் முதல் நோட்டீஸ்லையே அனைத்தையும் சொல்லிவிட்டேன். மகேந்திரன் தவறு செய்தார் என்று வா.சா.ஆ.11 உத்தரவில் இல்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

வாதிகள் உரிய பிரதிநிதித்துவ அடிப்படையில் தான் இந்த வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் என்னுடைய பதிலறிவிப்புக்கு எதிராக உள்ள நிலையில் எனது சாட்சியம் ஏற்றுத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

(3,4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை)

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.03.27 17:40:50 +0530

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்